**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.4–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . 2ம் பிரதிவாதி ஆஜர். 3 முதல் 9 மற்றும் 14,16,17 முதல் 19, 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 2 முதல் 9 மற்றும் 14 மற்றும் 20 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 14,16 மற்றும் 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை)

அ.வ.எண். 932/2015

பி.வா.சா.4 தினேஷ்குமார் த/பெ சண்முகம்

**3,4,20 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

1. சென்ரி டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னை படிக்க வைத்தது , எனக்கு திருமணம் செய்து வைத்தது என் தந்தை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய திருமண பத்திரிக்கையில் என் தந்தை பெயர் போட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1/12 பாகம் எனக்கு பிரிக்க வேண்டும் என்று போடப்பட்டுள்ளது.

2. நான் நீதிமன்ற கட்டணம் கட்டி எனக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்கும்படி கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் தங்கை பி.காம், சி.எ. படித்துள்ளார். என் தந்தை தான் என் தங்கையை படிக்க வைத்தார் என்றார் இல்லை. என் தங்கையை பள்ளியில் சேர்த்தது, கல்லூரியில் சேர்த்தது என்ற ஆவணங்களில் என் தந்தை கையொப்பம் உள்ளது என்றால் சரியல்ல. என் தங்கைக்கு 2018 ம் ஆண்டு திருணம் நடந்தது. என் தகப்பனார் தான் என் தங்கைக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. நானும், என் தங்கையும் சேர்ந்து தான் வழக்கை நடத்துகிறோம் என்றால் இல்லை.

3. வாரணாசிகவுண்டர் என்னுடைய தாத்தா என்றால் சரிதான். அவருக்கு பரம்பரை சொத்தாக 5 1/2 ஏக்கர் பூமி உள்ளது என்றால் சரியல்ல. 11 1/4 ஏக்கர் பூமி உள்ளது. 11 1/4 ஏக்கர் பூமி தற்போதும் இருந்து வருகிறது. பரம்பரையாக சொத்து வந்தது 5 1/2 ஏக்கர் பூமி என்றால் சரிதான். அது

எல்லாம் மேட்டு பூமி என்றால் சரியல்ல. எல்பிபி வாய்க்கால் மூலம் தண்ணி பாசனத்திற்குரியது. எல்பிபி வாய்க்கால் மூலம் தண்ணீர் பாசனம் கிடையாது அது மேட்டு பூமி என்று சொன்னால் சரியல்ல.

4. சென்னிமலைக்கவுண்டர் என்னுடைய தாத்தாவின் அப்பா ஆவார். அவர் 14.01.1991ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறக்கும்வரை பொதுகுடும்ப சொத்திற்க்கு அவர் தலைவராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் இறக்கும்வரை 5 1/2 ஏக்கர் பூமி அவரின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. சென்னிமலைக்கவுண்டர் இறக்கும் வரை குடும்பதலைவர் என்ற முறையில் 5 1/2 ஏக்கர் பரம்பரை சொத்தும் அவர் அனுபவத்தில் தான் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. ஊரில் மற்றவர்கள் சொல்லி தெரிந்து கொண்டேன். சொல்லி தெரிந்து கொண்டேன் என்பது வழக்கிற்க்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் அவருடைய சுவாதினத்தில் தான் இருந்தது என்றால் சரியல்ல.

5. மேற்படி சங்கதியை என்னுடைய எதிர்வாதத்தில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த பூமிகளில் எந்த வரும்படியும் இல்லை என்பதால் தான் 1ம் பிரதிவாதி கிராமங்களில் நெல் வாங்கி அதை வேகவைத்து அரிசியாக விற்றார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் எத்தனை கிரையம் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் எந்த, எந்த சொத்தை வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு எங்கிருந்து பணம் வந்தது என்றால் கூட்டு குடும்ப சொத்தில் இருந்து வந்தது. கூட்டு குடும்பமே அப்போது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. இந்த சொத்துக்கள் 1961, 1967 முதல் 1983 வரை பல கிரையங்களாக 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் சென்னிமலைக்கவுண்டர் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சொத்துக்களை கிரையம் பெற்றதால் தான் குடும்ப தலைவர் பெயரில் சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்துக்களுக்கு வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. 1994 வருடம் முதல் 1 முதல் 5 பிரதிவாதிகள் ரியல்எஸ்டேட் தொழில் செய்தார்களா என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு மூன்று சகோதரிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் மூவரும் எந்த, எந்த சொத்துக்கள்

குடும்ப சொத்துக்களோ அது அனைத்தையும் 07.11.2007ம் தேதி பதிவு செய்யப்பட்ட விடுதலைபத்திரத்தின் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

8. 08.12.1983ம் வருடம் பிரிவினை நடந்தது தெரியுமா என்றால் தெரியாது. தற்போத அந்த பிரிவினை தெரிந்துகொண்டீர்களா என்றால் தற்போது எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி மற்றவர்களோடு சேர்ந்து கூட்டாக வாங்கி சொத்தை 08.12.1983 தேதியில் பதிவு செய்யப்பட்ட பிரிவினை பத்திரன்மூலமாக தாவா அயிட்டம் 2 சொத்தை 1ம் பிரதிவாதிக்கு வந்தது என்று சொன்னால் நீங்கள் சொல்லி தான் தெரிந்துகொண்டேன். அதில் 1ம் பிரதிவாதி ரைஸ்மில் கட்டினார் என்றால் சரிதான். அது எந்த வருடம் என்று எனக்கு தெரியாது.

9. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட வருவாயில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. அதில் பிரவினை கோருவதற்க்கு எனக்கும், என் தங்கைக்கும் எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எந்த, எந்த சொத்துக்கள் கிரையம் வாங்கி விற்கப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. அது உண்மையா , பொய்யா என்ற விபரம் தெரியுமா என்றால் விற்பனையானது போர்சரிசெய்து விற்கப்பட்டது என்ற விபரம் தெரியும். யாருக்கு விற்கப்பட்டது என்ன விஸ்தீரணம், என்ன விலைக்கு விற்கப்பட்டபோன்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். போர்சரியாக விற்கப்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல. கிரையம் பெறப்பட்டு சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

10. நான் போட்டுள்ள வழக்கு விதமும் சரியில்லை காலதாமத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த மாதிரி வழக்கு தாக்கல் செய்தால் கிரையம் செய்தவர்களிடம் இருந்து பணம் பெறலாம் என்றும், என் தகப்பனார் சுயமாக பிடித்ததில் பாத்தியமாக இல்லாம் பாத்தியத்திற்க்கு பிரிவினை கோரலாம் என்று நானும், என் தங்கையும் சேர்ந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தங்கை மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கதக்கதல்லது என்று சொன்னால் சரியல்ல.

11. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதிதான் குடும்பதலைவர் என்று சொன்னால் சரியல்ல. அவர் செய்த கிரையங்கள் எல்லாம் குடும்ப நன்மை, தேவைகளுக்காகவும் செய்யப்பட்டவை என்பதால் அது என்னை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல.

6 முதல் 9, 14,16, 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.